தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# சுளுந்தீ புதினத்தின் கதைக்களம், கதைச்சுருக்கம், பன்முகத்தன்மை

**முனைவர்.ஆ.இராஜாத்தி,**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
தூய வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620002

**ஆய்வுச் சுருக்கம்**

முத்து நாகு என்பவரால் படைக்கப்பட்ட முதல் படைப்பு சுளுந்தீ. இப்புதினம் வரலாறு மற்றும் இனவரைவியல் சார்ந்த புதினமாக விளங்குகிறது. இப்புதினத்தின் கதைக்களம், நாயக்கர்கள் தமிழகத்தை ஆண்ட காலத்திற்குப் பின்னோக்கி வாசகனை அழைத்துச் செல்லுகிற படைப்பாகும். இப்புதினம் அன்றைய காலத்தின் தமிழக ஆட்சி சூழல், ஆதிக்கச் செயல்பாடுகள், கிறித்தவ இஸ்லாமிய மத ஊடாட்டங்கள், நயவஞ்சகங்கள், தமிழாின் மருத்துவம், குலத்தொழிலாளர்கள் நடத்தப்பட்ட விதம் போன்றன குறித்த செயல்பாட்டுப்பதிவுகளைக் கண்முன்னே படம்பிடித்துக் காட்டுகிறது. இக்கட்டுரையில் சுளுந்தீ புதினத்தின் கதைக்களம், கதைச்சுருக்கத்தையும், மதுரையின் கன்னிவாடி பகுதியின் சூழலியல் வாழ்வியல் தன்மைகளையும் எடுத்துரைக்கப்படவுள்ளன.

**முன்னுரை**

ஆங்கிலேயர் வரவால். தமிழ் இலக்கியத்தில் உரைநடை மலர்கிறது. உரைநடையினால் புதின இலக்கியம் உருவாகின. புதினங்கள் தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்ப்பதுடன் சமுதாயத்திற்கு அளப்பறிய பங்கினையாற்றி வருகிறது. மனிதனின் வாழ்வியலை, பிறப்பு முதல் இறப்பு வரை விாிவாகப் புனைவுடன் காட்டுவது புதினத்தின் பண்பாகும். நாவிதத் தொழில் செய்கிற சாமானியனே சுளுந்தீ புதினத்தின் கதைத் தலைவனாக வளம் வருகிறான். குலத்தொழிலைக் குடியானவர்களுக்குச்

செய்கின்ற மனித குலத்தை கதையின் கருவாக வைத்துப் படைக்கப்படுகின்ற புதினங்களால், குலத்தொழில் முறையின் நுட்பங்கள் அழிந்து விடாமல் ஆவணப்படுத்தப்படுவதை உணரமுடிகிறது. இதனை இனவரைவியல் தன்மையுடனும் அணுக முடிகிறது. இனவரைவியல் என்பது ஒரு சமூகத்தைப் பற்றிய முழுமையான வரைபடத்தினைச் சொற்சித்திரமாகக் காட்டுவதாகும். ஆசிரியர் முத்துநாகு நாவிதர்களைப் பற்றிய தகவல்களை இப்புதினத்தில் ஆவணப்படுத்தியிருக்கிறார். பதினெட்டாம் நூற்றாண்டில் நாயக்கர் ஆட்சியில், தமிழகத்தில் குறிப்பாக மதுரைக்கு உட்பட்ட கன்னிவாடியில் சாதாரண மக்களின் வாழ்வியல் நிலை எவ்வாறு அதிகாரத்தில் இருந்தவர்களால் ஒடுக்கப்பட்டு உரிமை மறுக்கப்பட்டும் இருந்ததைச் சுளுந்தீ புதினம் எடுத்துரைப்பதை இக்கட்டுரை வழி காணப்படவுள்ளன.

**புதினத்தின் கதைக்களம்**

தமிழகத்தில் நாயக்கர் காலத்தில் அன்றைய மதுரைப் பகுதியின் ஒரு பிரிவான கன்னிவாடியை மையமாகக் கொண்டு இக்கதை சூழல்கிறது. தமிழகத்திற்கு நாயக்க மன்னர்கள் வருகையின் காரணத்தை வரலாறு கொண்டு அறியும் போது, பதினான்காம் நூற்றாண்டில் மதுரையை ஆண்ட பாண்டிய மன்னர்களுக்குள் வாரிசுரிமைப் பிரச்சனை உருவாகிறது. இந்தச் சூழலில் தில்லி சுல்தான்கள் படையெடுப்புகளால் இப்பகுதி கைப்பற்றப்படுகிறது. சுல்தான்களிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள விஜயநகர அரசிடம் உதவியை நாடினார்கள் பாண்டியர்கள். ஆனால் விஜயநகர அரசியல் பிரதிநிதிகளின் சாணக்கியத்தால், பாண்டியர்கள் ஆட்சியை இழந்தனர். பாண்டிய அரசுக்குக் கீழிருந்த சிற்றரசுகள் ஒவ்வொன்றாக விஜயநகரத்தின்கீழ் வந்தன. இப்படித்தான் விஜயநகரத்து நாயக்கர்கள் மதுரையைக் கைப்பற்றிய வரலாறாக உள்ளது. மதுரைக்கு உட்பட்ட இடம் கன்னிவாடி. கன்னிவாடியைத் தலைமை இடமாகக் கொண்டு பன்றிமலையை (கொடைக்கானல், பழனி, வேடசந்தூர் வட்டாரம்) அரசாண்ட வேட்டுவ குல சிற்றரசுகளும் போரின் காரணமாக விஜயநகரத்தை ஆண்ட நாயக்கர் வசம் சென்றது. நாயக்கர்கள் அரண்மனைக்காரர்களாகப் பொறுப்பில் இருக்க, அவர்களின் அதிகாரத்தின் கீழ் இப்பகுதி பூர்வகுடிகளின் வாழ்வியல் சூழலை மையமிட்டே கதைத் தொடங்குகிறது. விஜயநகர ஆட்சியாளர்கள் மதுரைப்பகுதியை எழுபத்து இரண்டு பாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்திலும்

படைத்தலைவர்களையே ஆட்சியாளர்களாக நியமித்து அரண்மனை அமைத்து அரசாட்சி நடத்தினர். நாயக்கர்கள் கி.பி பதினேழாம் நூற்றாண்டில் முழுமையாகத் தில்லி சுல்தான்களிடமிருந்து மதுரையைக் கைப்பற்றிக் கொண்டனர். நாயக்க அரசு நிர்வாகத்தில் மன்னர், அவருக்கு அடுத்து அரண்மனையார் என்ற அதிகாரப் படிநிலை இருந்துள்ளது. மதுரை மன்னர் சொக்கநாத நாயக்கர் (1662 – 1682) இவரது ஆட்சியின் கடைசித்தளபதிகளில் ஒருவர் பெரிய அப்பய நாயக்கர். இவரின் மகன் சின்ன கதிரியப்ப நாயக்கர் கன்னிவாடியைக் கைப்பற்றி அரண்மனையார் பட்டத்திற்கு வந்துள்ளார். சுளுந்தீயின் கதை இங்கிருந்துதான் மிகச்சரியாகத் தொடங்குகிறது. இந்தக் காலக்கட்டத்திற்குக் கதையைப் பின்னோக்கிப் பார்க்க வேண்டியுள்ளது. பதினெட்டாம் நூற்றாண்டுக் காலக்கட்டத்தின் கதையாகச் சுளுந்தீ விளங்குகிறது.

**கதையின் தொடக்கம்**

அரண்மனைப் பணியாளன் கதிர்வாடன் கினிங்கிட்டி அடித்து ஊர்மக்களுக்கு ஓர் அறிவிப்பைத் தெரிவிக்கிறான். ” வர்ற சித்திர அமாவச அன்னைக்குக் கன்னிவாடி அரண்மன எல்லையில நாவிதன் மாடனோட, நம்ம கீரிப்பட்டி வங்காரன் மல்யுத்தப் போட்டியில மோதுறான் சாமியோவ்“ எனச் சாட்டினான். (சுளு.ப.35) இருவருக்குமான மல்யுத்தப் போட்டிக்கான அறிவிப்புடன் கதைத் தொடங்குகிறது. இந்த இருவரில் ஒருவன் மாடன். ஆவான். மாடனின் தந்தை ராமன். ராமன்தான் இந்தக் கதையின் முதன்மைக் கதைமாந்தனும் கதையின் நாயகனும் ஆவான். இவனைப் பின்னிப் பிணைந்தே கதை நகர்கிறது. நாவிதத் தொழில் செய்யும் ராமன் பண்டுவம் அறிந்தவன். பண்டுவம் என்ற சொல்லின் பொருள் மருத்துவம் ஆகும். மருத்துவம் அறிந்தவனாக வளம் வருகிறான். அதனால் அவனை ராமப் பண்டுவன் எனவும் அழைக்கின்றனர்.

**கதையின் சுருக்கம்**

ஆறடி உயரம், கெண்டைக்கால் தெரியக் கட்டிய வேட்டி. முழங்கால் கீழ்வரை தொங்கும் கைகளை வீசி விர்விர் என நடப்பவன் என்று ஆசிரியர் கூறுவதிலிருந்து ராமனை நம்மால் உருவகப்படுத்த முடிகிறது. பணிவுக்கு இலக்கணம் ராமன் என்று சொல்லலாம். ராமன் இப்புதினம் முழுவதும் சின்ன கதிரியப்ப நாயக்கரை வணங்குவதும், சித்தருக்குத் தவறாது வணக்கம் செலுத்திக்கொண்டே இருப்பதும் அவனின் பணிவான குணத்தை அறிய முடிகின்றது. இந்தப்புதினத்தில் ராமன் எவ்வளவு

முக்கியமோ அதே போல் மிக முக்கியமானவர் பன்றிமலையில் வாழும் சித்தர் ஆவார். சித்தரிடம் சீடனாக இருந்து அவரிடமான மருத்துவ முறைகளைக் கற்றுத் தேருகிறான். சித்தரும் ராமனுக்கு எல்லாவிதமான மருந்து தாயரிக்கும் முறைகளைச் சொல்லிக்கொடுக்கிறார். ராமனின் மனைவி வல்லத்தாரை ஆவாள். நாவிதத் தொழில் செய்யும் ஆணுக்கு நாவிதப்பட்டமும், நாவிதனின் மனைவியை மருத்துவச்சிப் பட்டமும் கொடுத்து அழைத்துள்ளனர். நாவிதத் தொழிலின் எல்லா வித்தைகளை அறிந்தவன் ராமன். நோயின் தன்மைகளை அறிந்து அதற்கான மருந்துகளையும் சொல்லும் அறிவாற்றல் படைத்தவன். கதையின் நடுவிலே மருந்து தாயரித்துக்கொண்டிருக்கும் போது ஏற்படுகிற தீ விபத்திலே ராமன் இறந்து விடுகிறான். அதன் பிறகு அவனின் மகன் மாடன் வழியாகக் கதை நகர்கிறது. மருந்தின் காரத்தால் வல்லத்தாரைக்கு கண்தெரியாமல் போய்விடுகிறது. மாடனுக்கு நாவிதத் தொழில் குலத்தொழில் என்ற வகையில் அரண்மனையார் தொழில் செய்ய உத்தரவு அளிக்கிறார். ஆனால் தளபதியின் வஞ்சகத்தால் யாரும் சவரம் செய்துகொள்ள வரமறுத்து, மாடனை அவமதிக்கின்றனர். வாழ்க்கையை வாழ அவன் பலவழிகளில் குடியானவர்கள், தளபதி, அரண்மனையார்களால் அலைக்கழிக்கப்பட்டு, இறுதியில் மல்யுத்தப்போட்டிக்குத் தள்ளப்படுகிறான். மாடன் தன் குலதொழிலையும் செய்ய முடியாமல், ஆசைப்பட்ட வீரனாகவும் ஆகமுடியாமல் அதிகார வர்க்கத்தினால் அவனது முடிவும் சோகத்தை ஏற்படுத்தி கதையை முடித்துள்ளார் ஆசிரியர். நாவிதனின் வாழ்வியலைத் தெள்ளத்தெளிவாகப் பதிவிட்டுள்ள ஆவணமாக இப்புதினம் திகழ்கிறது.

**சவரத்தொழில்**

நாவிதர்கள் தமிழகத்தில் வாழுகின்ற ஒரு இனக்குழுவினர் ஆவார். நாவிதர் என்ற சொல் நாவிகர் என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து உருவானது. இதற்குப் புனித மனிதன் என்று பொருளாகும். இவர்கள் மருத்துவர், பரியாரி, வைத்தியர் என்ற பெயராலும் தமிழகத்தில் அறியப்படுகின்றனர். இந்தச்சொற்கள் யாவும் மருத்துவர்களுக்கான ஒத்தான சொற்கள் என்று அகராதி விளக்கத்தின் மூலம் அறியமுடிகின்றது. இன்னும் சில பகுதிகளில் அம்பட்டன் என்ற சொல் வழங்கப்படுகிறது. இச்சொல் சமஸ்கிருதச் சொல்லாகும். அம்பாஸ்தா என்று சமஸ்கிருதத்தில் உள்ளது.

நாவிதத்தொழில் அல்லது சவரத் தொழில் என்றும் இத்தொழில் அழைக்கப்படுகிறது. ஒரு காலக்கட்டம் வரை நாவிதனிடம் சவரம் செய்கிற வழக்கம் தமிழகத்தின் ஊர்களில் இருந்துள்ளது. அறிவியல் தொழில் நுட்பத்தினால் இன்று அவரவராக சவரம் செய்கிற வழக்கம் பெருகிவிட்டது. நாவிதர்கள் ஒவ்வொரு ஊரிலும் குடித்தொழில் செய்து வந்துள்ளனர். இந்தத் தொழிலின் பெருமைகளும், கமுக்கங்களும் இப்புதின வழி அறியமுடிகிறது. இனக்குழு சமுதாயத்தில் நாவிதர்கள் எந்தளவுக்குச் சமுதாயத்தில் பங்கேற்றுள்ளார்கள் என்பதை இப்புதினத்தின் கதைத் தலைவன் ராமனை வைத்து அறிந்து கொள்ள முடிகிறது.

நாவிதத்தொழில் பெருமையான தொழிலாகப் பார்க்கப்பட்டுள்ளது. எவ்வாறெனில், "சீரங்கப் பெருமானுக்குச் செய்திடும் தொண்டும் நாவிதமும் ஒன்று" (சு.ப.28).

நாவிதர்கள் வைணவ மரபினை வழிபட்டுள்ளார்கள். ராமனின் தந்தையின் பெயர் சீரங்கன் என்பதாகும். சீரங்கனின் மகன் ராமன். ராமனின் மகன் மாடன். பரம்பரம்பரையாக வந்த இப்பெயர் வைணவம் சார்ந்ததாக இடம்பெறுவது குறியீடாக இருக்கிறது. ராமன் தன் தந்தையிடம் நாவிதம் கற்றுக்கொண்ட வயதில் நாலாயிரத் திவ்யபிரபந்தம் பாடல்கள் கேட்டு வளர்ந்துள்ளான் என்பதிலிருந்து ராமனின் பரம்பரையினர் வைணவத்தை தழுவியவர்ளாக இருக்கின்றனர்.

ராமன் தன் வாழ்நாள் வரை குலத்தொழிலைப் பக்தியோடு செய்துவருகிறான். அவனது குலத்தொழிலை தன் மகனுக்கும் கற்றுக்கொடுக்கிறான். ஆனால், அவன் வீரனாக வரவேண்டும் என்றும் ஆசையிருக்கிறது. மாடனை வீரனாக்க வேண்டும். அதிகாரத்தில் இருப்பவர்கள் சவரத்தொழில் செய்பவனை வீரனாக வருவதற்கு எதிர்ப்பு இருப்பதையும் இந்தப்புதினம் வெளிப்படுத்துகிறது. ஆதிக்கசக்திகள் நாவிதனுக்குப் பிறந்த ஒருவன் வீரனாக வருவதை விரும்பாத நிலையும், அவர்கள் அடக்கமும் பணிவுடனும் இருக்கக் வேண்டும் என விரும்புவதையும் புதினம் பல இடங்களில் சுட்டிக்காட்டுகிறது. வேறுவழி இல்லாமல்தான் ராமன் தன் விருப்பத்தை மனதில் புதைத்துக்கொண்டு குலத்தொழிலை மாடனுக்கு சொல்லிவிட வேண்டும் என குலத்தொழிலின் மகத்துவத்தைக் கற்பிக்கிறான். பலவித்தைகளை நாவிதத்தின்

பெருமைகளை சொல்லுவதில் ராமன் கைதேர்ந்த தொழில்காரனாக விளங்குவதைக் காணலாம்.

பிறப்பு முதல் இறப்பு வரை குடியானவர்களுக்கும் அரண்மனையாள்களுக்கும் சடங்குகளைச் செய்வதில் நாவிதர்களின் பங்களிப்பு இருக்கிறது. குடியானவன் இறந்தவுடன் முதல் எழுவு நாவிதர்களுக்குத்தான் வரும். அவர்கள், மாத்து விரிக்க ஏகாலி, பாடைகட்ட வாடனுக்கும் செய்தி சொல்லுகிற வழக்கம் இருந்துள்ளது. ஏகாலி என்பவன் துணிவெளுக்கும் தொழில் செய்பவன். பிணத்துக்கு நாவிதன் செய்கிற சடங்குகளை ராமன் சொல்லுகிற போது கண்ணில் காட்சிகள் தத்ரூபமாக நிழலாடுகிறதை உணரலாம். இறந்தவர்க்கு கட்டும் பாடை வகையைச் சொல்லும்போது, இறந்தவன் சைவ சமயத்தவன் என்றால், அவனுக்கு பாம்புப் பாடையும், வைணவனாக இருந்தால் கப்பல் பாடையும் கட்டணும் என்ற வழக்கம் இருந்ததாக கூறப்பட்டுள்ளது. நாவிதர்கள் ஆண்களுக்கு இடைச்சவரம் செய்யும் போது ஏற்படும் சிக்கல்களையும் இப்புதினம் விவரிக்கிறது. நாவிதத் தொழில் செய்கிறதனாலே முதலில் ஒருவரின் உடல்ரீதியான நோய்களை அறியும் நிலைக்கு உள்ளாகிறான். இதனாலே நோய்களுக்கான முதலுதவிகளைச் செய்கிறவர்களாக இருப்பதால் அவர்களைப் பண்டுவர்கள் என்று அழைத்திருக்கலாம் என்ற கருத்து அடிப்படையில் இருந்தாலும், சுளுந்தீயில் ராமன் எல்லா வித்தைகளையும் அறிந்த சித்தரிடம் மருத்தும் கற்றுக்கொண்ட பண்டுவனாக காணப்படுகிறான்.

**தொழில் சத்தியம் வாங்கும் முறை**

நாவிதம் என்பது அரண்மனைக் கமுக்கத்தைவிட கமுக்கமானது. கமுக்கம் என்பது இன்றைய காலத்தில் ரகசியம் என்று வழங்குகிறோம். அரண்மனை கமுக்கத்தை வெளியில் சொல்லக்கூடாது என்று தொழில் சத்தியம் வாங்கும் முறையைத் தொிந்துகொள்ள முடிகிறது. ஆம்பளங்களுக்கு சவரத் தொழில் செய்வதால், அவர்களது உடல் ரகசியங்களை அறிந்தவனாகிறான். ஆகவே அவரைப் பற்றி யாரிடமும் சொல்லக் கூடாது. மனைவியிடம் கூட இதைப்பத்தி பேசவே கூடாது என்பது நாவிதத்தொழிலில் மிக முக்கியமாகக் கடைபிடிக்கவேண்டிய நிலையாகும்.

“இதப்பத்தி நம்ம பொஞ்சாதிக்கிட்டக் கூட வாய்தப்பி தவறிக்கூட சொல்லக்கூடாதின்னு சவரக்கத்திய மேல சத்தியம் வாங்கிக் கத்தியச் கையில் கொடுப்பாங்க. பொதுவா மத்த தொழில் காரங்க தொழில் துவங்குறப்ப அவங்க குலசாமி மேல சத்தியம் வாங்குவாங்க, நாவிதத்தொழிலுக்கு மட்டும் தொழில் மீது சத்தியம் செய்து தொழில் துவங்குவாங்க. என் தாத்தா எனக்கு நாவிதத் தொழில் தர்மதத்தச் சொல்லிக் கொடுத்தாப் போல“(சுளு.ப.282) என்று ராமன் தன் மகனிடம் கூறுவதிலிருந்து சவரத்தொழிலின் கமுக்கத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

ஏன் உடலிலிருந்து உரோமங்களைக் களைய வேண்டும் என்பதும் இங்குக் காட்டப்பட்டுள்ளது. ஆசிரியர் நோய் பரவுவது எதனால் என்று பதிவிடுகிறார். “சீவராசிகளுக்கு மயிர் மூலம் நோய் பரவாது. ஆனால் மனுசப் பயலுக்கு மயிர் மூலம் நோய் பரவும் மனுசன படைச்ச ஆண்டவன், சவரம் செஞ்சு மனுச குலத்தையே காப்பாத்த நாவிதனப் படைச்சான்(சுளு.ப.281)“. என்று பதிவிடுகிறார். இன்றைக்கு அவர் அவராக தன் உடலைப் பேணிக்கொள்கிறார்கள். ஒரு காலக்கட்டம் வரை மனிதர்களுக்கு உடலைப் பேணி வளர்த்ததில் நாவிதர்கள் பயன்பட்டுள்ளார்கள்.

**கொலைத்தொழில் செய்த சவரக்கத்தி**

அரண்மனைக்கு எதிராக யாராவது சதித்திட்டம் தீட்டுகிறார்கள் என்று அரண்மனை காதுக்குத் தொியவந்தால், அவர்களை நாவிதனின் சவரக்கத்தியைக் கொண்டு ஒழித்துக் கட்டுகின்ற நிகழ்வைப் புதினம் எடுத்துரைக்கின்றது. பச்ச நாவியும் நவச்சாரமும் தடவப்பட்ட சவரக்கத்தியால் முகச்சவரம் செய்யும்போது சவரக்கத்தியில இருந்த பச்சநாவி அவங்க உடம்பில பரவி சொறி, படை, அரிப்பு வந்து யாரு மொகத்திலும் முழிக்காம உயிரை மாய்த்துக்கொள்ளுவார்கள்.

“இடமலைக்குடி மருதக் குடும்பன், சித்தரேவு சக்கரக்குடும்பன், காங்கோப்பட்டி பிச்சைப் பிள்ளைய உன் சவரக்கத்தி முடிச்சத மறந்திட்டயா? சவரக்கத்தி வைச்சிருக்கிறவன் வீரன்தானே. இதிலே தனியா என்ன அரண்மன வீரனாகுமின்னு ஆசப்படுற?“ (சுளு.ப.299). என்று சின்ன கதிரியப்ப நாயக்கர் ராமனிடம் கூறுகிற இடத்தில் குலத்தொழில் செய்யுறவனின் நிலையை உணரமுடிகிறது. சவரக்கத்தி

எதிரிகளைக் கொல்ல பயன்பட்டுள்ளதை இப்புதினம் பதிவிடுகிறது. சவரக்கத்தியால் தொலை செய்வது எப்படி வீரமாகும் என்று கதையின் நாயகனுக்குத் தெரிந்தாலும் அவனால் எதிர்த்துப் பேச முடியாமல், கூனி குருகி வாழ்கின்ற நிலைதான் சவரத்தொழிலாளரின் நிலையாகும். சமுதாயத்தில் சாதிய படிநிலையில் நாவிதனை அதிகார வர்க்கம் தனக்கு கீழ் கட்டுப்படுத்தி அடக்கியே வைத்துள்ளதைக் காணலாம்.

**பன்றிமலைச் சித்தர்**

சுளுந்தீயில் மிக முக்கியமான மற்றும் ஒரு கதைமாந்தர் பன்றிமலைச் சித்தர். சித்தர்கள் மருத்துவ அறிவு பெற்றவர்கள் என்ற கருத்து பன்றி மலைச்சித்தர் வழி மெய்ப்பிக்கிறார் ஆசிரியர். சித்தரின் வாழ்வு உணவுமுறை, உயிரை விடும் முறை போன்ற செய்திகளை இப்புதினம் நமக்கு வழங்குகிறது. சித்தர் தாம் அறிந்த மருத்துவ முறைகள் அனைத்தையும் ராமன் அறிந்து கொள்ள வழிவகை செய்கிறார். ராசபிளவு என்னும் நோயை மூன்றே நாளில் சித்தர் குணப்படுத்துகிறார். இதுபோன்ற பல நோய் போக்கும் மருத்துவ முறைகளையும் உயர்திணை அஃறிணை உயிர்களுக்கும் மருத்துவம் சொல்லுவதைப் பார்க்கும்போது தமிழனின் விஞ்ஞானத்தை வெளிப்படுத்துகிறது. ஒரு வமயம் இன்னொரு சமயத்தை வீழ்த்தப்பட்ட கதைக்கான காரணத்தையும் இப்புதினம் முன்வைக்கிறது. சைவத்திற்கும் சமணத்திற்கும் பூசல் இருந்ததை வரலாறு கொண்டு அறிகிறோம். சமணர்கள் மருத்துவ அறிவு நிறம்பியவர்கள். பண்டுவம் அறிந்த சமணத்தை வீழ்த்தியே சைவம் வளர்ந்துள்ளது. சமணமுனிகளைச் சாணக்கியத்தாலே சைவர்கள் வீழ்த்தியுள்ளனர் என்ற செய்தியினைச் சித்தர் குறிப்பிடுகிறார்.

பெரும்பாடு நோய்க்கான குங்கிலிய செந்தூரம், பதினெட்டு வகையான சன்னி நோய்க்குப் பூதச்செந்தூரம், தசைக்குள் இருக்கும் நீர்க்கட்டி கரைய வெள்ளிச்செந்தூரம், வெட்ட வாயுக்கான உப்புச்செந்தூரம் போன்ற மருந்துகளையும் தயாரிக்கும் முறைகளையும் கொடுக்கும் சித்தமருத்துவமாக இந்நூல் விளங்குகிறது

**குலவிலக்கு செய்யும் பழக்கம்**

தமிழகத்தில் குலவிலக்கு செய்கிற வழக்கம் இருந்துள்ளது. யாரெல்லாம் குலவிலக்கு செய்வார்கள் என்றால், உறவு மாறிப்பொறந்தவன், குலம் தவறிக் கலியாணம் முடிச்சவன் பொண்ணுக்குப் பரிசப்பணம் கொடுத்து கலியாணம் முடிப்பவன், மந்திரம் சொல்லி அக்னிய சாட்சியாக வைச்சு தாலி கட்டாமல் ராத்திரியில்

சுளுந்தீ பிடிச்சு கலியாணம் முடிப்பவன், கோயில் கொடைக்குச் சுளுந்தீ வில்பிடிப்பவர்கள் குலப்பழி சுமத்தி ஊரைவிட்டு ஒதுக்கி வைக்கிறது குலவிலக்கு என்று கூறப்படுகிறது.

குலநீக்க சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தி அண்ணன், தம்பி மீது பொய்ப்புகார் கொடுத்து தம்பி நிலத்தை அபகரிக்கத் திட்டம் தீட்டுகிறான். பங்சாயத்து செய்த குடிச்சபை தம்பியின் நிலத்தை அபகரித்து அண்ணனிடம் கொடுத்து, தம்பியை ஊருக்கு வெளியே துரத்தி விடுகிறது. இதுபோன்று குலவிலக்கானவர்கள் பஞ்சத்தை சாமளிக்க மலைப்பகுதியில் தரைக்காட்டில் விவசாயம் செய்து பிழைக்கின்றனர். அந்த நிலத்தைத் தெலுங்கு பேசும் மக்கள் குடிப்படை உதவியுடன் அவர்களை அங்கிருந்து விரட்டிவிட்டுக் கைப்பற்றிக்கொள்ளுகிறார்கள். குலவிலக்கானவர்கள் மலைப்பகுதிக்குள் ஓடி ஒளிந்து உயிர்பிழைத்து வாழ்கின்றனர். சில சமயங்களில் குலவிலக்கானவர்களை அடிமைகளாகவும் நடத்தப்படுகின்ற அவலம் மனதை உலுக்கும் விதமாக உள்ளது.

குலவிலக்கானவர்களைத் தொட்டுத் தொழில் செய்திடும் தொழிலாளி குடியானவர்களைத் தொடக்கூடாது. குலவிலக்கான சாதிகளாக நீசன், சண்டாளன், சங்கரசாதி போன்றவரக்ள் உள்ளார்கள் எனவும் இவர்கள் மற்ற மனிதர்கள் முகத்தில் முழிக்கக்கூடாது என்ற செய்தியும் குலவிலக்கு பற்றிப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. குல விலக்கானவர்களை ஊருக்கு வடக்கே குடியமர்த்துகிற வழக்கமும் உண்டு என்பதும் பதிவிடப்பட்டுள்ளது. குலவிலக்கானவர்களுக்கு நாவிதன், ஏகாலி, வாடன், தச்சன், குயவன் தொழில்காரர்கள் குடித்தொழில் செய்வதில்லை. குலநீக்கத்தின் கொடிய நடைமுறையை உணரமுடிகிறது. குலநீக்கம் மனிதர்களைச் சின்னாபின்னப்படுத்தி இருக்கிறது. இதன் தொடர்ச்சியாக அரசை எதிர்க்கும் மக்கள் இன்றும் மலைகளில் சென்று அடைக்கலம் புகுகின்றனர் போலும், குலநீக்கம் செய்யப்பட்டவர்களுக்கான கடுமையான சட்ட திட்டங்கள், தண்டனைகள் அதிர்ச்சிக்கு உள்ளாக்குகின்றன. சொந்த மண்ணில் வாழ இயலாதபடி குல நீக்கம் என்ற பெயரில் தனித்து, ஒதுக்கப்பட்டுப் புலம்பெயர்த்தப்பட்ட மருதுமுத்து ஆசாரி தன்னொத்தவர்களை அணிதிரட்டி ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடுகின்றான். சொந்த மண்ணில் வாழ்வதற்கான போராட்டத்தைக் காணமுடிகிறது.

**கிணறு வெட்டுகிற தொழில் நுட்பம்**

பஞ்ச காலத்தில் மக்களின் உணவுப்பழக்கத்தையும், பஞ்சத்தைப் போக்க கிணறு வெட்டிய அறிவியல் தொழில் நுட்பத்தையும் காட்டுகிறது. வெடிமருந்துப் பொருள்களை வைத்து கிணறு வெட்டப்பட்டுள்ளது. மருந்துகளைத் தயாரிக்கப் பயன்படும் பொருள்களைக் கொண்டு வெடிமருந்தும் தயாரித்துள்ளனர். கிணறு வெட்டுவதற்கு இடம் கண்டுபிடிப்பதற்குக் "கூவக சாத்திரம்" பயன்படுத்தியுள்ளனர்.

குறும்பர்கள் என்ற இனத்தைப் பற்றிய குறிப்பும் இடம்பெற்றுள்ளது. குறும்பர்கள் என்னும் இனத்தை சவரக்கத்தியைக் கொண்டு அழித்த நிகழ்வு, பிராமணர்கள் சுளுந்தீப்படை ஏந்தியமுறை போன்ற வரலாற்றுச் செய்திகளும் இருந்துள்ளதாக அறியமுடிகிறது.

**சொற்பெயர்கள்**

இச்சாபத்தியம் என்ற முறையை நோய்க்கு மருந்து சாப்பிடும் போது இருக்கவேண்டிய முறையாக சித்தர் கூறுகிறார். இச்சாபத்தியம் என்பது மருந்து சாப்பிடும் போது பின்பற்றும் முறையாகும். உப்பு, புளி நீக்கிய சாப்பாடு, சுடுநீர் குளிக்க, குடிக்க வேண்டும். மஞ்சள் பூசணி, அகத்திக்கீரை, முட்டை, எண்ணெய், மாமிசவகை போன்றன தவிர்த்து உணவை எடுத்துக்கொள்ளுதலாகும்.

ஆண்டுக்கணக்காக நாடு முழுக்க சுத்தித் திரியும் சாமக்கோடங்கி, இரவில் குறிசொல்லும் பூம்பூம் மாட்டுக்காரன் போன்றவர்கள் நாட்டு நடக்கும் செய்திகளைச் சேகரித்து அரண்மனையிடம் செய்திகளைச் சொல்லக்கூடியவர்கள் ஒற்றர்களுக்கு இணையாக இருந்துள்ளனர்.

மதிகெட்டான் கானல், கெவி, கூவக சாத்திரம், செந்தூரம், கோரோசனை, வாரிக்குழி, வாகடக்கலை, குறளிவித்தை, கட்டப்பணம், தண்டு மருத்துவம், வர்மப்பிடி, முனிஉச்சாட்டம், சுடுகூலி, தீக்கொளுத்தி இவை பற்றிய பெயர்களுக்கான காரணங்களையும் பதிவிடுகிறது.

சடாமுனி, பேய், சித்து, மந்திரம், கிடாமுட்டு, குதிரை மருத்துவம், யானை மருத்துவம், வாகடம், சைவ, வைணவ புகைச்சல், பாதிரிமார்களின் வருகை,

சுல்தான்களின் படை, படையெடுப்புகள், பளியர், முதுவர்களின் தனித்த குணங்கள் போன்றன நுட்பமாகப் பதிவாகியுள்ளன.

**முடிவுரை**

நாவிதனின் தொழில் பற்றிய முழுமையான தகவல்களை அறிந்துகொள்ளும் இனவரைவியலாக விளங்குகிறது. சவரத்தையும் பண்டுவத்தையும் பார்த்த ஒர் இனத்தைக் கண்டுணர முடிகின்றது. ஆங்கில மருத்துவம் இல்லாத காலத்தில் தமிழன் நோய்க்கான மருத்துவத்தை அறிந்துள்ள விஞ்ஞான அறிவைப் புலப்படுததுகிறது. மருந்து தயாரிக்கும் தொழில் நுட்பத்தையும் அறிய முடிகிறது.

பல்வேறு சாதியினர்களின் வாழ்வியல் செய்திகளை எடுத்துரைக்கும் புதினமாக விளங்குகிறது. இந்நிலத்தை இம்மண்ணை அந்நியர்கள் ஆட்சிசெய்து மக்களை அடிமைப்படுத்தியுள்ளனர். இப்புதினம் பதினெட்டாம் நூற்றாண்டு நாயக்கர் ஆட்சியில் தமிழகத்தின் தகவல் களஞ்சியமாக விளங்குகிறது. துணி வெளுக்கும் குடியானத் தொழில் செய்யும் ஏகாலியைப் பற்றியும், உப்புக் குறவர்கள் பற்றிய குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன.

**உதவிய நூல்கள்**

1. இரா.முத்துநாகு , சுளுந்தீ, ஆதி பதிப்பகம், பதிப்பு 2018

2. ஜெ.ஜெயவாணீஸ்ரீ , வைத்திய பலதிரட்டு, சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர். பதிப்பு 2015,

3. ந.சுப்ரமண்யன், தமிழக வரலாறு,(1565 – 1967), பதிப்பு 1980.